# In the Court of the District Munsif, Eraniel

**Original Suit No. 1/2005** **Date:17.02.2026.**

**(PW1)- தாணுதாஸ்**

**பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை**

1. நான் அரசு ஊழியராக வேலை பார்த்து விட்டு ஓய்வு பெற்று விட்டேன் என்றால் சரிதான். தாவா சொத்து யாருக்கு உரிமைப்பட்டது என்றால் எனது அப்பாவிற்கு உரிமைப்பட்டு அவரது காலத்திற்கு பின்பு எனக்கு கிடைத்தது. தாவா சொத்தின் சர்வே எண் மற்றும் விஸ்தீரணம் என்ன என்றால் சர்வே எண் 434/2 மற்றும் விஸ்தீரணம் புதிய சர்வே படி 1 ஏக்கர் 17 செண்ட் சொத்தாகும். தாவா சொத்து எனது அப்பாவிற்கு எவ்வாறு கிடைத்தது என்றால் எனது தாத்தா எனது அப்பாவின் பெயரில் வாங்கிய சொத்தாகும்.

2. எனது அப்பா தாவா சொத்தின் என்னென்ன மரங்ககள் நட்டுள்ளார் என்றால் தென்னை, பலா, மாமரம் மற்றும் குழை மரங்கள் நட்டுள்ளர். மேற்படி மரங்கள் எனது அப்பா நடவில்லை என்றாலும் மேற்படி மரங்கள் தானாக வளர்ந்தது என்றாலும் சரியல்ல. மேலும் தாவா சொத்தில் தென்னை மரங்கள் இல்லை என்றாலும் சரியல்ல. எனது அப்பா தாவா சொத்தை எப்போது கிரயம் பெற்றார் என்றால் 1928 வருடம் கிரயம் பெற்றார். எனது அப்பா எவ்வளவு விஸ்தீரணம் சொத்தை கிரயம் பெற்றார் என்றால் 1 ஏக்கர் கிரயம் பெற்றார். எனது அப்பா எப்போது இறந்தார் என்றால் 1970 வருடம் இறந்தார்.

3. எனது அப்பாவின் பெயரில் உள்ள வரி ரசீது தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். நான் எந்த ரசீதும் தாக்கல் செய்யவில்லை என்றாலும் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. என் உடன்பிறந்தவர்கள் உள்ளார்களா என்றால் தற்போது யாரும் உயிருடன் இல்லை. அவர்கள் வழக்கிற்க்கு முன்பே இறந்துவிட்டார்கள் என்றால் இறந்துவிட்டார்கள். மேற்படி சங்கதியை நான் பிராதில் குறிப்பிட்டுள்ளேனா

என்றால் குறிப்பிடவில்லை. 2004 ல் தாவா சொத்து புறம்போக்கு நிலம் என்பதை எவ்வாறு அறிந்தேன் என்றால் 1 ம் பிரதிவாதி சொல்ல தெரிந்துக்கொண்டேன்.

4. எனது அப்பாவின் இறப்பிற்கு பின்பு தாவா சொத்தை நான் அனுபவம் செய்யவில்லை என்றால் சரியல்ல. எனது அப்பாவின் இறப்பிற்கு பின்பு தாவா சொத்திற்கு எனது பெயரில் பட்டாவோ தீர்வையோ செலுத்தவில்லை என்றால் சரிதான், எனது அம்மா தான் அனுபவித்து வந்தார் நான் அப்போது மைனர் ஆவேன். மேற்படி சங்கதியை நான் எனது பிராதில் குறிப்பிட்டுள்ளேனா என்றால் குறிப்பிட்டுள்ளேன். நான் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் மேற்கூறியவாறு நான் மேற்படி சமயத்தில் மைனர் இல்லை என்றாலும் சரியல்ல.

5. புதிய சர்வே எந்த வருடத்தில் மேற்கொள்ளபட்டது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. அரசு புதிய சர்வே நடைப்பெற்ற சமயத்தில் அனைவருக்கும் அறிவிப்பு கொடுத்தது என்றாலும் நான் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. எனது பிராதில் தாவா சொத்தின் திருத்தப்பட்ட சர்வே எண் என்று 480 என்று குறிப்பிட்டுள்ளேன் அது எப்போது திருத்தப்பட்டது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நான் குறிப்பிட்டுள்ள பிளாட் எண் 480 என்பது மத்திய அரசின் 0.47.0 ெஹக்டர் நிலம் என்றாலும் அது மத்திய அரசின் புறம்போக்கு என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. தாவா சொத்து புதிய புல எண் 434/2 வில்லுகுறி கிராமம் 1.17.5 ெஹக்டர் நிலம் மாநில அரசின் அபிவிருத்தி ஆகாத நிலம் என்றால் சரியல்ல.

6. நான் இவ்வழக்கில் தாக்கல் செய்துள்ள உரிமை மற்றும் வருவாய் ஆவணங்கள் இவ்வழக்கிற்க்கு சம்பந்தமில்லாத ஆவணங்கள் என்றால் சரியல்ல. ரீசர்வே 1972 ல் தொடங்கப்பட்டு 1975 ல் முடிக்கப்பட்டது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. அவ்வாறு ரீசர்வேயில் ஏதேனும் தவறு ஏற்பட்டு இருந்தால் ரீசர்வே முடிக்கப்பட்டு 3 ஆண்டுகளுக்குள் சரிசெய்வதற்கு நான் மனு கொடுத்திருக்க வேண்டும் என்றாலும் வழக்கும் அந்த சமயத்தில் தான் தாக்கல் செய்திருக்க வேண்டும் என்றாலும் எனது அம்மா தான் சொத்துகளை நிர்வகித்து

வந்தார் எனக்கு அது பற்றி தெரியாது. எனது அம்மா இந்த வழக்கில் தரப்பினர் இல்லை என்றால் சரிதான்.

7. எனது அப்பா இறந்ததில் இருந்து நான் தான் வழக்கு சொத்தை கைவசம் வைத்து அனுபவித்து வருகிறேன் என்று வழக்கிற்காக பொய்யாக குறிப்பிட்டுள்ளேன் என்றாலும் நானோ எனது அப்பாவோ ஒரு காலத்திலும் தாவா சொத்தை அனுபவித்தது இல்லை என்றாலும் சரியல்ல. தாவா சொத்து அரசாங்கதிற்கு உரிமைபட்ட சொத்து என்றாலும் நான் அரசு சொத்து என்று தெரிந்திருந்தும் அதை ஆக்கிரமிக்கவேண்டும் என்ற கெட்ட எண்ணத்தில் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. அரசு சொத்தை தனி நபர் ஆக்கிரமித்தோ அல்லது எதிர்மறை அனுபவத்தில் வைத்திருந்தாலோ அதை தனி நபர் தனது சொத்து என்று உரிமை கொண்டாதா முடியாது என்றால் சரியல்ல. ரீசர்வே படி எனது நிலம் தவறுதலாக அரசு புறம்போக்கு என்று மாற்றப்பட்டு இருந்தாலும் நான் 3 வருடத்திற்குள் அதை திருத்தம் செய்ய நடவடிக்கை எடுத்திருக்க வேண்டும் என்றாலும் தற்போது அதை குறித்து கேள்வி எழுப்ப சட்டத்தில் இடமில்லை என்றாலும் அது பற்றி எனக்கு தெரியாது.

8. தாவா சொத்து அரசுக்கு உரிமைப்பட்ட இடம் என்றாலும் அதை எடுப்பதற்கு அரசிற்கு முழு உரிமை உண்டு என்றாலும் எனக்கு தாவா சொத்தில் எந்த உரிமையும் இல்லை என்றாலும் அதற்கான எந்த ஆவணமும் நான் தாக்கல் செய்யவில்லை என்றாலும் பிராதில் குறிப்பிட்டுள்ள சொத்திற்கும் தாவா சர்வே எண்ணிற்க்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றாலும் எனவே எனது வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டியது என்றாலும் சரியல்ல.

(ஒப்பம்)

மாவட்ட உரிமையியல் நீதிபதி,

இரணியல்.